# THE POETRY OF TAMIL SPEAKING WOMEN AFTER NINETEEN EIGHTIES IN SRI LANKA - DEVELOPMENT AND TRENDS.

Eastern University, Sri Lanka
Academic Affairs Department
21 AUG 2018
Vantharumoolai
Chenkalady

LIBRARY
08 JAN 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA.

**MRS. SUTHAHINY DESMAN RAGEL**
EU/PGS/2008/M.Phil/TL/02

M.phil13
Thesis
Library - EUSL

Thesis submitted to the Department of Languages, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka For the award Of the Degree of Master of Philosophy in Tamil February 2017.

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச் சுருக்கம்

‘எண்பதுகளுக்குப் பின் ஈழத்தில் தமிழ் பேசும் பெண்கள் கவிதைகள் வளரச்சியும் போக்கும்’ எனும் இவ் ஆய்வானது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித் துறையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட முதுதத்துவமாணி கற்கை நெறியினைப் பூர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாகும்.

இவ் ஆய்வானது ஈழத்தில் எண்பதுகளின் பிற்கூற்றில் வலுப்பெற்ற பெண்நிலைச் சிந்தனைகளைத் தொடர்ந்து தமிழ் பேசும் பெண்கள் கவிதைகளில் ஏற்பட்ட மாற்றம் குறித்து ஆராய்கின்றது. தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள வண்ணமே பெண்கள் கவிதைக் அமைந்துள்ளதா, அல்லது பெண்களுக்கென தனித்துவமான இலக்கியப்பாரம்பரியம் நிலைபெற்றுள்ளதா என்பது ஆராயப்படுகின்றது.

பெண்நிலைச் சிந்தனைகள் வளர்ச்சி கண்டதையடுத்து எண்பதுகளுக்கு முன்பிருந்த கவிதைப் போக்கில் இருந்து தனித்துவப் போக்குடன் பெண்களின் கவிதைகள் வளம் பெற்றுள்ளன. பெண்ணை வீட்டுக்குரியவளாகவும், பேசா மடந்தையாகவும், ஆணுக்குப் பணிவிடை செய்பவளாகவும், தன் உணர்வுகளை வெளிப்படத்தாதவளாகவும் சமூகம் பெண்ணைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. இத்தகைய எழுதாச் சட்டங்களைத் தாண்டி பெண்கள் சுயபிரக்ஞையுடன் இலக்கியங்களுடாக குறிப்பாகக் கவிதையூடாகத் தம் உணர்வுகளைப் பதிவு செய்யத் தொடங்கினர். கல்வியறிவு, பெண்கள் இயக்கங்களின் செயற்பாடுகள், பெண்கள் மத்தியில் எழுந்த அரசியல் சமூக விழிப்புணர்வு போன்ற காரணிகளின் வாயிலாக அவர்கள், தம் அடிமை வாழ்விலிருந்து விடுதலைக்காய்ப் போராடத் தலைப்பட்டனர்.

இத்தகைய பின்னணியில் ஆரம்பத்தில் சமூக விடுதலையைப் பேசிய பெண்கள் காலப்போக்கில் தமது விடுதலையை தாமே கண்டடைய முற்பட்டனர். பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறைகள், அடிமை வாழ்வு, வீட்டில் நிலவும் நெருக்கடிகள், சீதனப் பிரச்சினைகள், போன்றவற்றை வெளிப்படையாகவே கவிதைகளில் விமர்சித்தனர். ஈழத்தில் நிலவிய யுத்த சூழலில் அவர்கள் எதிர்கொண்ட இன்னல்கள், இழப்புக்கள், உறவுகளின் பிரிவுகள், பெண்களின் போராட்ட அனுபவங்கள் என யுத்தத்திற்கும் அரசியல் வன்முறைக்கும் எதிராக பெண்ணின் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

சமூகம் கட்டமைத்து வைத்த காதல் கவிதைளுக்கப்பால் பெண் தனது காதல் உணர்வைத் தெளிவாகப் பதிவு செய்யத் தொடங்கினர். யுத்தத்தாலும் உயர்கல்விக்காகவுமென பல தேவைப்பாடுகள் நிமிர்த்தம் வெளி நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த பெண்களும் தம் உணர்வுகளை, பிரச்சினைகளை கவிதைகள் வாயிலாகப் பதிவு செய்யத் தவறவில்லை. இவ்விதம் கவிதைத் துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதையும் வெளியீட்டுக் களங்கள் அவர்களுக்குத் துணை நிற்பதையும் ஆய்வின் மூலம் கண்டடைய முடிகின்றது.

பெண்நிலைச் சிந்தனையோடு வளர்ச்சி கண்ட பெண்களின் கவிதைகள், தமக்கான தனித்துவக் கவிதைப் பாரம்பரியத்தை கொண்டவையாக உருப்பெற்றன. 'நான்' என்ற சுய பிரக்ஞையுடனும் தன்னுணர்ச்சி வெளிப்பாட்டுடனும் கவிதைகள் வெளிவருகின்றன. வடிவத்திலும் வெளிப்படுத்தும் முறைமையிலும் தனித்துத் தன்மை கொண்டவையாகப் பெண்கள் கவிதைகள் விளங்குகின்றன. தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் காலந்தோறும் பெண்களின் இலக்கியப் பங்களிப்புக்கள் கவனத்தில் கொள்ளப்படாத போதும் அவர்கள் தமக்கான இலக்கியப் பாரம்பரியத்தைக் கண்டடைந்துள்ளனர் என்பதை எண்பதுகளுக்குப் பின் எழுந்த தமிழ் பேசும் பெண்கள் கவிதைகள், கவிதைகள் தொடர்பான ஆய்வுகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆய்வாளரின் உறுதியுரை | I |
| மேற்பார்வையாளர் சான்றிதழ் | II |
| பீடாதிபதியின் உறுதிப்படுத்தல் | III |
| மொழித்துறைத் தலைவரின் உறுதிப்படுத்தல் | IV |
| நன்றியுரை | V |
| ஆய்வுச் சுருக்கம் | VI - VII |
| உள்ளடக்கம் | VIII |
| இயல் - 01 அறிமுகம் | 01 - 14 |
| இயல் - 02 ஈழத்தில் தமிழ் பேசும் பெண்கள் இலக்கியம் பற்றிய எண்ணக்கருவின் வளர்ச்சியும் அதன் பின்னணியும். | 15 - 25 |
| இயல் - 03 எண்பதுகளிலிருந்து ஈழத்தில் தமிழ்பேசும் பெண்களின் கவிதைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி. | 26 - 51 |
| இயல் - 04 எண்பதுகளுக்கு பின் ஈழத்துத் தமிழ்பேசும் பெண்களின் கவிதைப் போக்குகள். | 52 - 109 |
| இயல் - 05 பெண் கவிதை சொல்லும் முறைமைகள். | 110 - 134 |
| இயல் - 06 தொகுப்புரை | 135 – 137 |
| உசாத்துணை நூல்கள் | 138 - 145 |
| பின்னிணைப்பு | 146 - 148 |